ARCHUNA

# அர்ச்சுனா



சிறுவர்களுக்கான மாத இதழ்

50 ரூபா

கல்வி முயற்சி பெருவாழ்வு ஓகஸ்ட் 2011



விநோதப் பறவைகள்



அல்பிரெட் நோபல்



அம்மா சொல் கேள்



ந. சுவர்ணா
அருணோதயாக் கல்லூரி
• வடமாகாண திருக்குறள் மனனப்போட்டி - 1st
• கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அகில இலங்கை திருக்குறள் மனனப்போட்டி - 1st

GATEWAY
CfiCT

UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

FAST TRACK
TRAINING PROGRAMME

We inspired
We GATEWAY


- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking



CONTACT

- Luxmee Theatre Lane, Nelliyady.
  021 226 2395
- 1st Floor, New Market Buildind,
  Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road,Jaffna.
  021 567 5555 / 021 222 7967

GATEWAY CfiCT | GATEWAY Language Centre | GATEWAY KIDS SCHOOL OF COMPUTING | IPICT International Pedagogical ICT Licence | ICDL | e-Citizen | e-TYPE



# சேர்ந்தே நடைபயில்வோம்.

அன்புக்குரிய எங்கள் செல்வங்களே!

அர்ச்சுனா வீறுநடை போட்டு உலா வருகின்றான். நீங்கள் அவனை விருப் போடு வாங்கித்தொட்டு அரவணைத்து வாசிக்கிறீர்கள். வாசித்தால் மாத்திரம் போதாது அர்ச்சுனா பற்றிய உங்கள் கருத் துக்களையும் அர்ச்சுனா தனது பாதை யில் உங்களுடன் இணைந்து ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் எழுதுங் கள்.

அர்ச்சுனாவில் உங்கள் ஆக்கங்க ளைப் பிரசுரிக்க நாம் ஆவலோடு காத்தி ருக்கிறோம். கவிதை,கட்டுரை, சிறுகதை போன்றவற்றையும் உங்கள் திறமைக ளுக்குக் கிடைத்த பாராட்டுக்களையும் அவை தொடர்பிலான புகைப்படங் களையும் எமக்கு அனுப்புங்கள். அர்ச்சுனா உங்கள் நண்பனாய், மந்திரி யாய், நல்லாசிரியனாய் உங்களின் அன்பில் வளர்ச்சியில் ஆவலோடு செய லாற்றுவான் அர்ச்சுனாவில் அங்கத் தவராகுங்கள்.

ஆசிரியர்

## ஆழ்ந்து படிப்போம்

எதைக் கற்றாலும் ஆர்வத்துடன் கற்றால் அதிலுள்ள ஆழமான விடயங்கள் புரியும் முறையாச் சிந்தித்தால் நவீன சிந்தனைகள் தோன்றும்.

அறிஞர்கள் யாவரும் சாதாரணமாப் படிப்பதில்லை எதைப் படித்தாலும் எதைச் செய்தாலும் சந்தித்தாலும் அதைச் தங்களின் வாழ்க்கையின் உண்மைக ளோடு தொடர்புபடுத்தியே சிந்திக்கிறார்கள் செயற் படுத்தகிறர்கள். அதனால் இயற்கை தனது அறிவுச் சுரங்கத்தைத் திறந்து காட்டுகிறது. இந்த மா உல கத்தின் உண்மைகளைக் கண்டு கொள்ள ஊக்கு விக்கிறது. நாம் ஆழமாகப் படித்தால் வாழ்க்கையின் உணர்வுகளோடு அவை ஒன்றிட அவை எம்மை வாழ வைக்கிறது.

■ யாரோ



லப்பாம்.டப்பாம் இருவரும் பள்ளிக் கூடத்தால் வேர்க்க விறு விறுக்க வீட்டிற்கு வந்ததைக் கண்ட தாய் பயந்து போனாள் கையோடு முதல் பாடம் நடக்கும் போதே சாத்திரியாரைக் கண்டு பயந்து வீட்டிற்கு ஓடி வந்து விட்டார்கள்.

"என்ன நடந்தது ஏன் உடனே வந்துட்டியள்" தாய் கேட்டாள்.

லப்பாம் உடனே ஒரு பொய்யை அவிழ்த்து விட்டான். "அம்மா பள்ளிக்கூடம் விடுதலை விட்டுட்டு" என்றான். அவள் பாவம் நம்பி விட்டாள்.

இரண்டு நாட்கள் வீட்டிலேயே இருந்தவர்களுக்கு அலுப்புத் தட்டி விட்டது எங்கேயாவது போகவேண்டும் போல் இருந்தது.

லப்பாம் கேட்டான் "புகை விடாத ரெயில் வந்திருக்காம் போய்ப் பாப்பமா?" டப்பாமுக்கு ஆச்சரியமாக இருந்தது நம்ப முடியவில்லை அப்படியும் இருக்குமா ? புகையிரதம் என்றால் புகை விடத்தானே வேண்டும் "ஓமடா போய்ப் பார்ப்பம்" என்றான்.

# லப்பாம் டப்பாம் 03



"அம்மோய் பள்ளிக்கூடம் எப்ப திறக்குதெண்டு போய்ப் பாக்கிறம்" என்று சத்தம் போட்டு சொல்லிவிட்டு தாய்பதில் சொல்லுமுன்பே புறப்பட்டார்கள்.இருவரும் புகையிரத நிலையம் நோக்கிச் சென்றனர். சாத்திரியாரையோ அல்லது பள்ளிக்கூட வாத்தியாரையோ சந்திக்க நேருமோ என்று பயந்த வண்ணம் போனார்கள். பிரதான பாதையைவிட்டு குறுக்குப் பாதையால் போனார்கள்.அப்படிப் போகும் போது கோட்டும் சூட்டும் அணிந்து கையில் சூக்கேசுடன் ஒருவன் எதிர்ப்பட்டான்.

இதற்கு முன் இப்படியான உடையில் ஒருவரையும் இவர்கள் பார்த்ததில்லை இருவருக்கும் திகில் நெஞ்சைக் கவ்வியது லப்பாம் டப்பாமின் காதுக்குள் சொன்னான்."இவன் பிள்ளைக் கடத்தல் காரனடா" இதைக்கேட்டதும் டப்பாமிற்கு உதறல் எடுத்தது. ஓடலாமா என்று இருவரும் தீர்மானிப்பதற்கு முன் "டேய் எங்கேடா போறீங்கள்" என்று அதட்டிக் கேட்டான் கோட் சூட் ஆசாமி.

பயத்தினால் உடல் நடுங்க இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். இவர்களைப் பார்த்த உடனேயே சரியான மூடர்கள் என்று கோட்சூட்ஆசாமி தெரிந்து கொண்டான். "இந்த சூட்கேசைக் கொண்டு வாங்கடா" என்று சொல்லியவாறு டப்பாமுடைய தலையில் வைத்தான். தலையில் வைக்கப் பட்ட சூட்கேசை இருகைகளாலும் பிடித்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தனர்.

சத்தம் போடாது டப்பாம் அருகில் சென்றான்.கோட் சூட் ஆசாமி குறுக்குப்

**அமரர். வில்வம் பசுபதி**



பாதையால் ரெயில்வே ஸ்டேசனை அடைந்தான். அவனுடன் சென்ற இருவரும் ரெயில்வே ஸ்டேசனையும் அங்கு தரித்து நின்ற ரெயிலையும் கண்டதும் பயம் நீங்கி குதூகலம் அடைந்தார்கள். ரெயில் பெட்டியில் ஏறி சூட்கேசை வைத்தவுடன் "இறங்கி ஓடுங்கடா" என்றான் அவன். அவர்கள் அதைக் கவனியாது தங்களை மறந்து மேலே சுழலும் மின் காற்றாடியைப் பார்த்த வண்ணம் நின்ற னர். கோட் சூட் ஆசாமி அசதியில் உறங்கிக் கொண்டிருந்தான்.

அந்த நேரம் விசில் சத்தம் கேட்டது. உடனே ரெயில் மெதுவாக நகரத்தொடங்கியது. லப்பாமிற்கும் டப்பாமிற்கும் இது புது அனுபவம் இதற்கு முன் அவர்கள் ரெயிலில் பயணம் செய்ததே இல்லை. டிக்கட் இன்றி ஏறிவிட்டோமென்ற பயமோ தாய் தேடப் போகிறாவே என்ற மனக்கிலேசமோ இன்றி வேடிக்கை பார்த்தார்கள்.



திடிரென டிக்கெட் பரிசோதகர் ரெயில் பெட்டியில் ஏறினார். அவரைக்கண்டதும் இருவருக்கும் உதறல் எடுத்தது பொலிஸ் இன்ஸ்பெக்டர் என அவர்கள் எண்ணினார்கள். இருவரும் கோட் சூட் ஆசாமி இருந்த சீற்றுக்குக் கீழ் குப்புற விழுந்து படுத்தார்கள். சீற்றுக்குக் கீழ் படுத்தவர்களின் கவனம் கோட் சூட் ஆசாமியின் சப்பாத்து மேல் சென்றது இதற்கு முன் சப்பாத்தை நன்றாகப் பார்த்தறியாத இருவருக்கும் அவை விநோதப் பொருளாகத் தோன்றின. உடனே வழக்க மான குறும்புச் சேட்டையில் இறங்கினார் கள். இரண்டு சப்பாத்து லேஸ்களையும் சேர்த்து முடிந்து வேடிக்கை பார்த்தார்கள்.

இதை அறியாத கோட் சூட்ஆசாமி அசதியில் தூங்கிக் கொண்டிருந்தான். டிக்கெட் பரிசோதகர் அவனருகில் வந்து அவனை எழுப்பி டிக்கெட்டைக் கேட்டார்.

திடுக்கிட்டு விழித்தவன் கால் சட்டைப் பையில் இருந்த டிக்கெட்டை எடுக்க எழும்பினான். இரண்டு சப்பாத்தையும் லப்பாம் டப்பாம் சேர்த்துக் கட்டியதால் எழும்பிய உடனே தடுமாறி விழுந்தான். அவன் விழுந்ததையும் பொலிஸ் காரன் போல் ஒருவர் நிற்பதையும் கண்ட லப்பாம் "கடத்தல் காரன்" என்று கூவினான் அவனைத் தொடர்ந்து டப்பாமும் சத்தம் போட்டான்.

சீற்றுக்கடியில் இருந்து வந்த சத்தம் கேட்டு கோட் சூட் ஆசாமி திடுக்கிட்டான். என்ன நடந்ததென்று அவனுக்குப் புரியவில்லை எப்படி விழநேர்ந்ததென்றும் தெரியவில்லை அவன் ஓட முயற் சித்து மீண்டும் விழுந்தான். டிக்கெட் பரிசோதகருக்கு ஒன்றும் புரிய வில்லை ஆனால் ஏதோ மர்மம் இருப்பதாகப்பட்டது. இதற்கிடையில் லப்பாமும் டப்பாமும் போட்ட கூச்சலில் அந்தப் பெட்டியில் சனம் கூடியது ரெயிலில் பயணம் செய்த பொலிஸ் அங்கு வந்தார். அவர்கள் கோட் சூட் ஆசாமியைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டனர். பல காலமாகத் தேடப்பட்ட கடத்தல் ஆசாமி தங்களுக்கு டிமிக்கி கொடுத் தவனை லப்பாம் டப்பாம் பிடித்து விட்டார்களே என்று ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

**திடிரென டிக்கெட் பரிசோதகர் ரெயில் பெட்டியில் ஏறினார் அவரைக்கண்டதும் இருவருக் கும் உதறல் எடுத்தது**

அவன் கையில் விலங்கை மாட்டி அவன் சூட்கேசைத் திறந்தனர். அதற்குள் மிகத் தீங்கு விளைவிக்கும் போதைப் பொருட்கள்

இருந்தன. சமூ தாயத்திற்கு கேடுவிளை விக்கக்கூடிய போதைப்பொருட்கள். கடத்தல் ஆசாமியை லப்பாம் டப்பாம் இருவரும் திட்டமிட்டே பிடித்துக் கொடுத்தார்கள். என பொலிஸாரும் சக பிரயாணிகளும் நம்பினார்கள். அவர்களுக்கு சன்மானமும் பாராட்டுக்களையும் வழங்கிய பொலிஸார்.



**லப்பாமிற்கும் டப்பாமிற்கும் இது புது அனுபவம் இதற்கு முன் அவர்கள் ரெயிலில் பயணம் செய்ததே இல்லை**

"நீங்கள் துப்பறியும் சிங்கங்கள் எங்களுக்கு உங்கள் உதவி என்றென்றும் தேவை "என்றார்.

அதனைக் கேட்டு வழக்கமான அசட்டுச் சிரிப்புடனே லப்பாமும் டப்பாமும் அடுத்த புகையிரத நிலையத்தில் இறங்கி பொலிஸ் ஸ்ரேசனில் பெற்ற சன்மானத் துடன் வீடு சென்றார்கள்.



## துவிச்சக்கர வண்டி

இயல்வாணன்



காலால் மிதிக்க ஓடும் வண்டி
காற்றை வலித்துப் போகும் வண்டி
ஆளாள் ஏற்றிச் செல்லும் வண்டி
அழகாய்ப் பயணம் செல்லும் வண்டி

பாரம் பலவும் சுமந் திடலாம்
பாதை எதிலும் சென் றிடலாம்
தூரம் குறுக்கி உள் வழியே
துணிவாய்ப் பயணம் செய் திடலாம்

எரிபொருளே தேவை யில்லை
எவரும் வாங்கும் எளியவிலை
நன்மையதே நாளுஞ் செய்யும்
நச்சுப் புகை இதற்கு இல்லை.

## புத்தகம்



புத்தகம் இல்லாத வீடும்
யன்னல் இல்லாத வீடும்
ஒன்றே!
ஒரு நல்ல புத்தகம்-ஒரு நல்ல
மனிதனுக்கு ஒரு நல்ல
சொத்தாகும்.



## பத்திரிகை

குழந்தைகளே உங்களுக்குக்கென்று ஒரு பத்திரிகை 1751ம் ஆண்டு தான் வெளிவந்தது. அதனை வெளியிட்டவர். ஜோன் ரீயூபரி என்ற இங்கிலாந்துக்காரர். பத்திரிகையின் பெயர்- த. லில்லி .புட்டியன்.



# மறக்க முடியாத பொய்



**ஜானகி** அன்ரி ஒருமுறை செக்கச் செவேல் என்று பழுத்திருந்த பிளம்ஸ் பழங்களை வாங்கினார். அன்ரிக்கு நான்கு குழந்தைகள். கோபு, பாபு, சிட்டு, பட்டு என்று அவர்களுக்குப் பெயர். குழந்தைகள் சாப்பிட்ட பிறகு பழங்க ளைத் தரலாம் என்று அன்ரி நினைத்தார்.

பழங்கள் மேசைமீது ஒரு தட்டில் இருந்தன. பட்டுக்குட்டி இதுவரை பிளம்ஸ் பழத்தைச் சாப்பிட்டதே யில்லை. ஆசையோடு அவற்றை மணந்து பார்த்தான். அந்த வாசனை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. பழத்தைத் சாப் பிட்டுவிட வேண்டும் என்ற ஆசை அவ னுக்கு உண்டாயிற்று.

அறையில் யாருமில்லாதபோது ஒரு பழத்தை எடுத்துச் சாப்பிட்டுவிட்டான். எல்லோரும் சாப்பிட்ட பின்பு ஜானகி அன்ரி பழங்களை எண்ணிப் பார்த்தார். ஒன்று குறைந்தது.

"மைடியர் சில்ட்ரன். ஒரு பழம் குறை கிறது. யாராவது சாப்பிட்டீர்களா?" என்று குழந்தைகளைப் பார்த்துக் கேட்டார்.

"நான் இல்லை நான் இல்லை" என்று எல்லோரும் சொன்னார்கள். பட்டுக்குட்டியும் அவர்க ளோடு சேர்ந்து "நான் தின்ன வில்லை" என்று சொன்னான்.


"சரி... யார் சாப்பிட்டிருந்தாலும் பரவாயில்லை. ஆனால் திராட்சைப் பழத்தில் கொட்டை இருக்கும். சாப் பிடத் தெரியாமல் அந்தக் கொட்டையை யும் சேர்த்து சாப்பிட்டால் வயிற்றில் பெரிய தாக பிளம்ஸ் மரம் முளைத்து விடும். அதுதான் எனக்குப் பயமாக இருக்கிறது" என்றார் ஜானகி அன்ரி.

பட்டுக்குட்டி பயந்துபோய் இல்லை நான கொட்டையை யன்னலுக்கு வெளியே எறிந்துவிட்டேன் என்று அழத் தொடங்கினாள்.

"பொய் சொன்னால் எப்படியும் மாட் டிக் கொள்கிறோம் பார்த்தாயா? இனி மேல் பொய் சொல்லக்கூடாது... என்ன?" என்று பட்டுக்குட்டியை சமாதானப்படுத் தினார் ஜானகி அன்ரி.



# அல்பிரட் நோபல்



**1896 இல் எண்பது லட்சம் பவுணைக் கொண்டு ஒரு நிதியை துவக்கினார். அந்நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகையைக் கொண்டு பரிசுகள் வழங்க ஒரு குழுவை நியமித்தார். அதுவே நோபல் பரிசு என்று அவர் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது**

உலக அளவில் பல்வேறு துறைகளில் சாதனை புரிபவர்களுக்கு நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக் கப்படுகிறது. இப்பரிசினைப் பெறுவதையே பெரும் பாக்கியமாகக் கருதுகின்றனர். அதற்காக சிறந்த சாதனை புரியும் முயற்சியில் பலரும் ஈடுபட்டு வருகின்றனர். இதனை ஏற்படுத்தித் தந்தவர்தான் ஆல்பெர்ட் நோபல் என்பவர்.

இவர் ஏழைக்குடும்பத்தில் *1833* ஆம் ஆண்டு அக் டோபர் 21ம் திகதி பிறந்தார். இவர் தந்தை இம்மனுவல் இவர் தன் முயற்சியால் முன்னேறி இராணுவ எஞ்ஜினியராக உயர்ந்தார். இவர் நிலத்திலும் கடலிலும் வெடிக்கும் வெடிமருந்துகளைத் தயாரித்து ரஷ்யாவுக்கு விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தார்.

தன் மகன் ஆல்பெர்ட் நோபலுக்கு தம் வீட்டிலேயே ஆசிரியரைக் கொண்டு பாடம் போதித்து வந்தார். பின்னர் ஆல்பெர்ட் நோபல் அமெ ரிக்கா சென்றார். அங்கு ஓராண்டு காலம் என்ஜினியர் பயிற்சி பெற் றார். தம் சகோதரர்களுடன் சேர்ந்து தெற்கு ரஷ்யா வில் கடலில்

எண்ணெய் எடுக்கும் வேலைத்தொடங்கினார். இருந்தாலும் அத்தொழில் அவருக்கு நாட்டம் ஏற்படவில்லை. அவர் கவனம் தன் தந்தை செய்து வரும் வெடிமருந்துகளின் மீது இருந்தது. அதனால் எண்ணெய் எடுக்கும் தொழிலை விட்டு விட்டு தந்தையுடன் சேர்ந்து வெடிமருந்து செய்யும் தொழிற்சாலையை நிறுவினார்.

ஒரு சமயம் நைட்ரோ கிளிசரினை சோதித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டது. இதனால் தொழிற்சாலை தீக்கிரையானது. அவர் சகோதரர் உட்பட பலரும் தீயில் கருகி இறந்தனர்.

இந்த விபத்துக்கு பிறகு அவர் தந்தையின் மனம் வேதனையுற்றது. அதனால் உடல் நலிவுற்றார். பாரிசவாதம் அவரைப் பற்றியதால் படுத்த படுக்கையானார். ஆல்பெர்ட் நோபல் அதன் பிறகு நோர்வேயிலும் ஜெர்மனியிலும் பல தொழிற்சாலைகளை நிறுவினார். இருந்தாலும் பல இடங்களிலும் றைட்ரோ கிளிசரின் என்ற திரவத்தால் எளிதில் விபத்துக்கள் ஏற்பட்டு வந்தன. அதனால் அதன் உற்பத்திக்கே தடை விதிக்கப்பட்டிருந்தது.






அவர் தொடர்ந்து என்ன செய்வது என்று யோசித்தார். நைட்ரோ கிளிசரின் தானே வெடிப்பதனால் தான் விபத்து ஏற்படுகிறது என்பதை அநுபவவாயிலாகக் கண்டறிந்தார். அதனால் அதையே வெடிக்கச் செய்தால் அன்றி தானாகவே வெடிக்கும் தன்மையைக் கட்டுப்படுத்தினால் பயனளிக்குமே என்று நினைத்தார். அதன் பயனாக பாதுகாப்பான வெடிமருந்துகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவினார்.

ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலும் தொழிற்சாலைகளை அமைத்தார். அமெரிக்காவிலும் இரண்டை நிறுவினார். புகைவராத பீரங்கி வெடிமருந்துகளைக் கண்டு பிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பு அவரை மிக உன்னத நிலைக்கு உயர்த்தியது. அவர் பெருமளவில் பணத்தைச் சேர்த்து உலகில் பிரபல்யமானவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். வெடிமருந்துகள் இராணுவங்களில் பயன்படுத்தப்பட்டன. வீரர்கள் அதன் துணையால் ஏராளமான உயிர்களைக் கொன்று குவித்தனர். ஆல்பெர்ட் இதைக் கண்டு பெரிதும் வேதனையுற்றார். தன்னுடைய கண்டுபிடிப்பால் எத்தனையோ உயிர்கள் பலிகொள்ளப்படுகிறதேஎன்று துடித்தார். தன்னுடைய விபரீத கண்டு பிடிப்பினால் பொருள் குவிந்தாலும் அவர் மனநிம்மதி பூரணமாக அழிந்தது. அவர் திருமணம் கூட செய்து கொள்ளாமல் தனியாகவே வாழ்ந்தார்.

பெரும்பணக்காரராகத் திகழ்ந்தாலும் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. தான் செய்துவிட்ட தவறுக்கு பரிகாரம் தேடும் பணியில் இறங்கினார். அதனால் அவர் உலக சமாதானத்துக்காக பாடுபட்ட நிறுவனங்களுக்கு ஏராளமான பொருளை வழங்கினார். அத்துடன் 1896 இல் எண்பது லட்சம் பவுணைக் கொண்டு ஒரு நிதியை துவக்கினார். அந்நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு பரிசுகள் வழங்க ஒரு குழுவை நியமித்தார். அதுவே நோபல் பரிசு என்று அவர் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. நாடு, இனம், மதம், மொழி என்ற எந்த வேறுபாடுமின்றி உலக அளவில் சிறந்த சேவை புரிபவர்களுக்கு அந்த பரிசு வழங்கப்படுகிறது. அறிவியல் துறையில் பௌதிகம் இரசாயனம்



மருத்துவம் இலக்கியம் மற்றும் சமாதானப் பணி ஆகிய துறைகளில் இறந்தவர்களும் இப்பரிசு பெற உகந்தவர்கள் ஆவர். பரிசுக் குரியவர்களைத் தேர்ந்தெடுக்க ஸ்வீடனி லுள்ள பல அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. இப்பரிசு ஒவ்வோராண்டும் வழங்கப்படும். உலக சமாதானத்துக்காக முதன் முதலில் 1091 இல் செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்று வித்த ஹென்றி டுனான்டுக்கு அளிக்கப்பட் டது •




தகவல் களஞ்சியம் 7

## யானை



யானைகளுக்கு வியர் வைச் சுரப்பிகள் கிடை யாது. உடல் வெப்பத் தைக் குறைப்பதற்கு தங் கள் காதுகளால் விசிறிக் கொள்கிறது. யானையால் தன் துதிக்கைக்குள் ஒன்றரை காலன் தண்ணீரை உறிஞ்சி வைத்துக்கொள்ள முடியும். யானை 3 மைல் தொலை வில் தண்ணீர் இருப்பதைக் கூட உணர்ந்து கொள்ளும் சக்தி கொண்டது.

## மாம்பழங்களை நீரில் போட்டால்..

மாம்பழங்களை நீரில் போட்டால் சில பழங் கள் மிதக்கும் இதற்குக் காரணம் மாங்காயின் கொட்டையைச் சுற்றியுள்ள ஓட்டிற்குள் இயற் கையிலேயே காற்று உண்டாவதே. ஒரு பொருள் நீரில்மிதப்பதற்குக் காரணம் அதன் அடர்த்திக் குறைவே. ஓடு பெரிதாக இருந்தால் காற்று அதிகம் இருக்கும். அதே நேரத்தில் சதைப் பற்றுக்குறைவாக இருக்கும். எனவே நீரில் முழுகுபவையே அதிக சதைப் பற்றுள்ள தாக இருக்கும்.

## தண்ணீர்

நாள் ஒன்றுக்கு ஒரு சாதாரண நபருக்கு ஆறிலி ருந்து எட்டு டம்ளர் தண்ணீர் தேவைப்படு கிறது. இதை மிக எளிதான முறையில் கண்டு பிடித்துவிடலாம். நாம் உட்கொள்ள வேண்டிய தண்ணீரின் அளவானது நம் உடம்பிலிருந்து வெளியேறும் சிறுநீரின் நிறத்தைப் பொறுத்த தாகும். தண்ணீர் குடிப்பது குறையக் குறைய சிறுநீர் குறைவாகவும் கருஞ் சிவப்பாகவும் வெளியேறி உடலில் வெப்பத்தையும், சிறுநீர் கடுப்பையும் ஏற்படுத்தும்.

# கணனி



சின்னஞ் சிறிய பெட்டிக்குள்ளே
பென்னம் பெரிய மூளை!
சின்னஞ் சிறிய பெட்டிக்கு
கணனி என்று பெயராம்!


விசைப் பலகை சுட்டியும்
விரிதிரையும் மையமும்
இணைந்து ஒன்றாய் கணனியாம்
இணையில்லாத கருவியாம்!

பாட்டும் கதையும் கூறிடும்
படமும் வரைந்து காட்டிடும்
கேட்ட கணக்கும் தீர்த்திடும்
சேர்ந்து விளை யாடிடும்

சுட்டி கையில் பற்றியே
விசைப்பலகை தட்டுவோம்!
மட்டில்லாத மகிழ்வுடன்
கணனியோடு கூடுவோம்!

■ இயல்வாணன்

# அர்ச்சுனாவின் பாராட்டுக்கள்



**செல்வன். சிவகோணேசன் மனாமிர்தன்**
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்)

2010 தேசிய மட்ட ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.



**செல்வன். ஸ்ரீதரன் டிலக்ஸன்**
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்)


2011 வடமாகாணத் தடகளப் போட்டியில் உயரம் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.


# தகவல் களஞ்சியம்

சிங்கம் ஒரே
மூச்சில் 30
கிலோ
இரையைத்
தின்றுவிடும்.



ஆமைக்குப்
பற்கள்
கிடையாது.





குரங்குகளுக்கு இரண்டு
மூளைகள் உள்ளன.
ஒன்று உடலையும்
மற்றொன்று வாலையும்
செயல்பட வைக்கிறது.



முதலையைத்
துப்பாக்கியால் சுட்டால்
துப்பாக்கிக் குண்டு அதன்
தோலைத் துளைக்காது.
அந்த அளவுக்கு வலிமை
வாய்ந்தது.



டால்பின் மீனுக்கு
குரல்வளை
கிடையாது. எனினும்
32 விதமான
ஒலிகளைக்
காற்றை ஊதி
வெளிப்படுத்துகிறது.

# குறள்

திருக்குறளில் இடம்பெற்ற



திருக்குறள்

| | |
|---|---|
| மலர்கள்: | அனிச்சம் குவளை |
| பழம்: | நெருஞ்சிப்பழம் |
| மரங்கள்: | பனை மூங்கில் |
| விதை: | குன்றிமணி. |

# வார்த்தை விளையாட்டு



ஆசிரியர் என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களுக்குத் தரப்பட்டுள்ள இலக்கங்களை அவதானியுங்கள். இலக்கங்கள் குறிக்கும் எழுத்துக்களை இணைத்து விளையாட்டில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ஆ | சி | ரி | ய | ர் |

1. இடையர் – 145
2. மகிழ்ந்திருக்க – 23
3. வாழ்த்துக்கூறு – 12
4. திராவிட இனத்தார் அல்லர் – 1345
5. ஒரு நாட்டவர் – 1245



கலைவட்ட மேடை என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களுக்குத் தரப்பட்டுள்ள இலக்கங்களை அவதானியுங்கள். இலக்கங்கள் குறிக்கும் எழுத்துக்களை இணைத்து விளையாட்டில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| க | லை | வ | ட் | ட | மே | டை |

1. வியாபாரத்தலம் – 17
2. ஆடை – 612
3. உழுந்துப் பலகாரம் – 37
4. மீன் பிடிக்க உதவும் – 32
5. இவை அறுபத்து நான்கு – 12

# யானை பல் விளக்குமா



**சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால்தான் எதையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்**

புத்தக மூட்டையுடன் பள்ளிக்குக் கிளம்பிய அப்பு அம்மாவுக்கு டாட்டா சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

"ஏண்டா இன்றைக்கு குளிச்சியா" என்றாள் அப்புவின் அம்மா.

"நேரம்போச்சம்மா நாளைக்குக் குளிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடினான்.

அப்பு ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தான். வகுப்பில் அவன்தான் முதல் மாணவன். அப்புவின் அம்மாவிற்குப் பெருமையாக இருந்தது.

அடுத்த நாள் வகுப்பிற்குள் நுழைந்ததும் ஆசிரியர் அப்புவின் அருகல் வந்தார். ஏன் அழுக்குச் சட்டையை போட்டுக் கொண்டு வந்திருக்கிறாய். துவைத்துப் போடக்கூடாதா? என்று ரகசியமாக அவனிடம் கேட்டார்.

"மறந்திட்டேன் சார்" என்று சமாதானம் சொன்னான் அவன். படிப்பில் கெட்டிக்காரனாக விளங்கிய அப்பு ஏனோ தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. பல நாட்கள் அப்பு பல் விளக்காமலேயே பள்ளிக் குப் போயிருக்கிறான். அப்போது அவனது நண்பர் பையன்கள் இவனிடம் கேட்டால் "யானை பல் விளக்குகிறதா" என்று கிண்டலாகப் பதில் சொல்வான். அப்புவின் அம்மாவும் வகுப்பு ஆசிரியரும் பலமுறை கூறியும் அவன் தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தவே இல்லை. அவன் கவனம் முழுவதும் படிப்பிலேயே இருந்தது. இதனால் பிள்ளைகள் இவனை அழுக்கு மாமா என்று அழைத்தனர்.



அரையாண்டுத் தேர்வு வந்தது. அப்பு விழுந்து விழுந்து படித்தான். முதல் மாணவன் என்ற இடத்தைவேறு யாரும் தட்டிக் கொண்டு போய்விடக்டாது என்பதில் கவனமாக இருந்தான்.

"டேய் குளிச்சிட்டுப் போய் படிடா" இது அப்புவின் அம்மா.குளிக்கிற நேரத்துல ஒரு பாடம் படிக்கலாமம்மா என்பான் அப்பு. பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாள் இருந்தது. அப்போது அப்புவுக்கு திடீரென்று பல்வலி வந்தது. வலியோடு பள்ளிக்கூடம் சென்றான். மாலை வீட்டிற்கு வருவதற்குள் அவன் முகத்தில் தாடைப்பகுதி பெரிதாக வீங்கி

விட்டது. "விண் விண்" என்று வலித்தது. உடம்பு அனலாகக் கொதித்தது. அப்புவின் அம்மாவும் அப்பாவும் கைவைத்தியமாக ஏதோ செய்தார்கள். எதுவும் சரிப்பட வில்லை. விடிந்தால் அரையாண்டுத் தேர்வு. அப்பு புலம்பிக் கொண்டே இருந்தான். அவனால் வலியைத் தாங்க முடிய வில்லை. ஆசிரியர் அவனை மன்னன் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் படி கூறினார்.

அடுத்த நாள் மருத்துவ மனையில் அப்புவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. "பல்வலிக்கு காரணமாக இருந்த சொத்தைப் பல்லை உடனடியாக எடுக்க வில்லை என்றால் உயிருக்கே ஆபத்து" என்றார் டாக்டர். அப்பு "அரையாண்டுத் தேர்வுக்குப் போக முடியவில்லையே" என்று அழுது கொண் டிருந்தான்.

"தினந்தோறும் பற்களை சுத்தம் செய்தால் இப்படிப்பட்ட பிரச்சினையெல்லாம் வரவே வராது" என்றார் டாக்டர்.

அப்பு ஒருவாரம் மருத்துவமனையில் இருந்தான். அரையாண்டுத் தேர்வு முடிந்து அன்றுதான் பள்ளிக்கூடம் திறந்தது. அன்று வகுப்பில் மாணவர் அறிக்கை கொடுக்கப்பட்டது. "முதல் மாணவன் ரங்கன்" என்று ஆசிரியர் பெயரைப் படித்தபோது அப்பு தேம்பி அழுதான். ஆசிரியர் அவனைச் சமாதானப்படுத்தினார்.

"சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால்தான் எதையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்" என்றார்.

அப்பு மௌனமாக இருந்தான். அடுத்த நாள் அவன் பள்ளிக்கு சுத்தமாக ஆடையணிந்து பளிச் என்று வந்தான். "அழுக்குமாமா இப்போ பளிச் என்டு மாறிட்டாண்டா"என்று ஒருவன் சொல்ல எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். அப்புவுக்கும் சிரிப்பு வந்தது.

# அம்மா



பாலூட்டிப் பசியோட்டும்
பாசமுள்ள அம்மா.
தாலாட்டிச் சீராட்டும்
தாய்மையுள்ள அம்மா.
நூல்காட்டி அறிவூட்டி
நோயோட்டும் அம்மா.

அன்புக்கு அணிசெய்யும்
ஆற்றல்மிகு அன்னை.
துன்பத்தை தடுத்தாலும்
தூய்மைவளர் அன்னை.
இன்பத்தை எமக்கீயும்
இறையாவாள் அன்னை.

அம்மாவின் அன்புக்கு
ஈடேது சொல்வோம்.
அம்மாவின் சொல்கேட்டு
ஆர்வமொடு வாழ்வோம்.
அம்மாவின் அறிவேற்று
அகிலத்தை வெல்வோம்.

செ.மகேந்திரன்



# அம்மா சொல் கேள்

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக்கொண்டு வந்தவன் மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடிப் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப் பட்டிருந்தது. அதன் அருகே ஓர் ஆட்டுக் குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.


வேலிக்குள் முகத்தை நுழைத்துக் கொண்டு ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி உனக்கு என்னவேண்டும்? என்று கேட்டது.

ஓநாயும் "நண்பா நண்பா... இங்கே இள சான பசும் புல் கிடைக்குமா என்று பார்க் கிறேன் இளம்புல் என்றால் எனக்கு சரியான விருப்பம். அதைத் தின்று தண் ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக் கும் உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக் கிறது எனக்கு அது கிடைக்க வில்லை..." என்று வருத்தத்துடன் கூறியது.

"அப்படியா நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார் களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

"சேச்சே...அதெலாம் சுத்தப் பொய" என்றது ஓநாய். "அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய் அதைச் சாப்பிட்டுவிட்டு சந்தோச மாகச் சுற்றலாம்" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து ஓநாயின் பக்கம் போனது. உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

அந்த ஆட்டுக் குட்டிக்கு ஓநாயைத் தெரியவில்லை. அது போகட்டும் பரவா யில்லை. அனுபவம் நிறைந்த அம்மா அப்பா பேச்சை கேட்டிருந்தால் மதிப்பு வாய்ந்த தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?



# விடுகதைகள்

1 கண்ணெதிரே பறக்கிறான். பார்க்கலாம் பிடிக்கவோ முடியவில்லை. அவன் யார்?

2 புன்னகையால் மணம் பரப்பும் வெள்ளைக்காரி. பூத்திருப்பாள் ஒரு பொழுது வெள்ளைக்காரி யார் அது?

3 கூரை மேலே கூவி அலாம் அடிக்கும் காலை வேளை அலாம் அது என்ன?

4 மொட்டை மாடு கட்டிக்கிடக்குது மூக்கணாங்கயிறு மேயுது அது என்ன?

5 பறக்கும் அது பறவை போல் பாலூட்டும் குட்டிக்கு உறங்கும் மரக்கிளையிலே உலவும்ட அது இருட்டிலே அது என்ன?

6 தேர் ஒன்று உயர்ந்து நிற்கிறது. தெருவில் எங்கும் ஓடாது. படைத்த தச்சர் பலரங்கே பதுங்கியிருப்பார். கண்டிருப்பீர் அது என்ன?

7 தட்டினால் உடையும் உள்ளே தாகம் தீர்க்கும் நீருண்டு வெட்டினால் பிளக்கும் உள்ளே வெள்ளை பூவுண்டு நெய்யுண்டு அது என்ன?

8 தண்ணீரின் மேல் மிதக்கும் முட்டை. தட்டி உடைத்தால் ஓடோ குஞ்சோ இல்லை?

9 பூட்டுச்சாவி இல்லாப்பெட்டி அடுப்பு மூட்ட அழகுப் பெட்டி அது என்ன?

**விடைகள் 42 ஆம் பக்கத்தில்**




அது ஒரு பள்ளிக்கூடம். ஆசிரியர் அன்று புவியீர்ப்பு சக்தி பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். முடிவில் மாணவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார்.

"பூமி ஏன் கீழே விழுவதில்லை!"


ஆளுக்கு ஒவ்வொருவிதமாய் பதில் சொன்னார்கள்.

ஒரு புத்திசாலி சிறுமி எழுந்து. "பூமி எங்கே சார் விழும்?" என்று வேகமாகக் கேட்டாள்.

ஆசிரியர் திகைத்துப் போய் நின்றார். ஆனாலும் அதுதான் சரியான பதில்.

எல்லையற்ற அண்டவெளியில் எது மேல்புறம்? எது கீழ் புறம்? அதில் மேலே கீழே என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது. அப்படி இருக்கும் போது. "பூமி ஏன் கீழே விழுவதில்லை?" என்ற கேள்வியே சரி இல்லை! ஆசிரியர் அச்சிறுமியைப் பாராட்டினார்.

## தவளை ஒன்றை வரையுங்கள்



# அர்ச்சுனா தரும் சொற்கோலம்



## திறனாய்வு இலக்கம் 3


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | | ■ |
| ■ | | ■ | | ■ | | ■ | 5 |
| ■ | 6 | | | | | ■ | |
| 7 | | ■ | | ■ | 8 | | |
| ■ | 9 | 10 | | ■ | | ■ | |
| 11 | | | ■ | 12 | ■ | ■ | |
| | ■ | ■ | ■ | 13 | 14 | | |
| | ■ | 15 | | ■ | 16 | | ■ |

திறனாய்வு இல. 3 க்கான விடைகளை தங்கள் பெயர் முகவரியுடன் ஓகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக இம் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சொற்கோலம்
அர்ச்சுனா
361 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

## இடமிருந்து வலமாக

1. மிகவும் வேகமாக ஓடும் பறவை.
6. கிழங்கு வகைகளில் ஒன்று.
7. கோவில்களிலும் பாடசாலைகளிலும் அடிக்கப்படுவது.
8. வயல்
9. தேநீர் வடிக்கப்பயன்படும்.
11. நெருப்பாய்ப் பரவுதல்.
13. கள்வன்.
15. பணம்.
16. வணங்கு.



## மேலிருந்து கீழாக

2. சிங்களத் திரைப்படங்களில் நடித்துப் பிரசித்தமான ஒரு தமிழ்ப்பெண்.
3. புகையிரதம்.
4. இலங்கையில் தயாரிக்கப்பட்ட நகைச்சுவைத் திரைப்படம்.
5. வன்னிப் பிரதேசவாசி.
10. கப்பம்.
11. விளக்கு.
12. தொடக்கம்.
14. இரும்பு பிடிக்கும் (கீழ் மேல்).

## திறனாய்வு இலக்கம் 2 இன் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ச் | 2 சோ | ந் | 3 தி | ■ | 4 கா | ர் |
| டி | ■ | க | ■ | ரு | ■ | வ | ■ |
| 5 மு | ற | ம் | ■ | 6 கோ | வ | ல | ன் |
| றை | ■ | ■ | 7 க | ண | வ | ன் | ■ |
| ■ | ■ | 8 ம | ன் | ம | த | ன் | ■ |
| ■ | 9 மு | ன் | னி | லை | ■ | ■ | 10 அ |
| 11 பு | ன் | ன | கை | ■ | 12 த | ■ | ன் |
| லி | ■ | ன் | ■ | 13 வி | ரு | ம் | பு |

## சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர்




1. ஏ. வாசவி
620. நாவலர் வீதி
அரியாலை.
யாழ்ப்பாணம்.

2. தி. கௌதம்
மானுக்கை.
அல்வாய் வடக்கு.
அல்வாய்.


3. தி. சிதம்பரநாதன்
டச்சு வீதி.
கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

4. வி. ஷைலானந்த் ஷர்மா
184. பிரதான வீதி.
நெல்லியடி.

# சுனாமி


சுனாமி என்ற ஜப்பானியச் சொல்லால் அழைக்கப்படும் சுனாமிப் பேரலைகள் முதன் முதலாக இலங்கையை 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி தாக்கியது. இந்தச் சுனாமிப் பேரலைகளால் இலங்கையின் கரையோரப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. பலநூறு பேர் இறந்து போயினர். சுனாமி என்ற ஜப்பானியச் சொல்லில் சு என்பதைக் குறிப்பது துறைமுகம் ஆகும். நாமி என்பது அலை என்ற கருத்தைத் தரும். இது துறைமுக அலை என அழைக்கப்படுகிறது.

## வட்டத்தில் இருந்து உருவத்தை பெறல்




■ எஸ். மிலானி

# அர்த்தம் உணர்ந்தே எழுதிடுவோம்



ககனம் என்றால் சொர்க்கம் காடு
கனகம் என்றால் மீன்கொத்தி, பொன்

வானகம் என்பது ஆகாயம்
வாகனம் என்றால் ஊர்தியன்றோ

ஆவணம் என்றால் பத்திரமாம்
ஆணவம் என்றால் செருக்காகும்

பாகதம் என்றால் பிராகிருதமொழி
பாதகம் என்றால் பெரும்பாவம்

தவளம் என்றால் வெண்மை நிறம்
தளவம் என்றால் மணக்கும் முல்லை


நகரம் என்றால் வாழுமிடம்
நரகம் என்றால் தீய உலகம்

அரசவை என்றால் அரச சபை
அசரவை என்றால் வியக்க வைத்தல்

எழுத்துகள் தம்இடம் மாறிவிட்டால் - அவை
இயம்பிடும் அர்த்தமும் மாறிவிடும்
அழகிய தமிழினில் வார்த்தைகளை - அதன்
அர்த்தம் உணர்ந்தே எழுதிடுவோம்.

# கண்டறியாதது

## "டைனமோ"



கந்தையா : தென்னை மரத்தடியில் தோட்டம் -அங்கு
அன்ன நடைப்பிடியாள் நாட்டம்-பின்பு
என்னை நினைத் தொருகால் ஓட்டம் -சைக்கிள்
தன்னை உருட்டுவதால் வாட்டம்

வடிவேலு : சந்தி கடந்துவரும் வேளை - லைற்
இன்றி விரைந்து வரும் வேளைப் -பொலிஸ்
கண்டு தெடர்ந்து வந்து வால்வுக் - கட்டை
தன்னை இழுத்தெடுத்துப் போனான்.


கந்தையா : டைனமோ ரயரைத் தின்று
சுழல்வதை விடுத்ததாலோ
ஒளியிலா விளக்கினோடும்
உலல்கிறாய் வடிவேல் இந்த
டைனமோ வேலை செய்யும்
முறையினை உரைப்பாயின்று

வடிவேலு: காந்தம் நீ காணா விட்டால்
கதைப்பார்கள் கேட்டிருப்பாய்
காந்தம் உன் மனைவியானால்
கவர்ச்சியை அறிவாய்தானே
காந்தத்தின் விளைவுதன்னை
உணர்ந்திடும் பிரதேசத்தைக்
காந்தமண்டல மென்பார்கள்
காந்த மொன் றிங்கேயிந்த

கந்தையா : டைனமோ வுள்ளிருக்கே
கண்டனான் மேலே சொல்லு


வடிவேலு : ரயருடன் உரோஞ்சிச் சுற்றும்
சிறிய அவ்வுருளையோடு செவ்வக வடிவக் கம்பிச்
சுற்றினை இணைத்துள்ளார்கள்.
கம்பியின் முனை உலோகத்
துடைப்பத்தை மருவிச் செல்லும்
காந்த மண்டலத்தினூடே





இ. சிவானந்தன்





நகருமின் கடத்தி காந்த
விசைக்கோடு வெட்டுகிற
கதியினில் மாற்றமுற்றோர்
உந்தல் மின்னியக்க விசை
உற்பத்தியாகும் போது
தோன்றியே மாறிமாறிப்
பாய்வதாம் ஆடலோட்டம்

கந்தையா : தண்ணியைப் போட்டால் மட்டும்
தம்பையன் தலைகால் மாறி
ஆடுவான் இன்றேல் தங்கக்
கம்பியே அதனைப் போல

வடிவேலு : எளிதிலே கடத்துகின்ற
உலோகமாம் செம்பிலங்கே
சுதந்திர இலத்திரன்கள்
பலவுள ஆதலாலே
இருபுள்ளிக் கூடேமின்
அமுக்கத்தை உண்டு பண்ண
இலத்திரன் பாய்ந்து சென்று
மின்குமிழ் ஒளிரவைக்கும்

கந்தையா : பனியடா இனிமேலின்று
சரிவரா நாளை காண்போம்
மனிசியாற் பெரிய தொல்லை
பட்டணம் போவாயானால்
ஒரு சுடு தண்ணீர்ப்போத்தல்
வாங்கி காசு தாறன்.

காந்த விசைக்கோடு - MAGNETIC LINES OF FORCE
உந்தல் மின்னியக்க விசை- INDCED ELECTRONTIVE FORCE
ஆடலோட்டம்- ALTERNATING CURRENT
சுதந்திர இலத்திரன்கள்– FREE ETECTRONS

# அப்படியா



உலகில் அதிகமாக வெய்யில் அடிக்கும் இடம் : கிழக்கு சகாரா பாலைவனம்.



உலகின் மிக உயரமான விமான நிலையம் : லே.



உலக வானிலை ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள இடம் : ஜெனீவா.



உலகின்மிகப்பெரிய பிரமிடு அமைந்துள்ள இடம் : மெக்சிகோ.



உலகின் முதல் அணுகுண்டு சோதனை நடந்த இடம் : அலாமா கொரடா.



உலகின் மிகப்பெரிய கோவில் : ஆங்கர்வாட்.



உலகில் பழமையான விளையாட்டு : போலோ.


பாதையை அறியுங்கள்
WIN



# மனித சர்க்கஸ்

ஒரு நகரத்தில் இருந்து காட்டுக்கு வேட்டை ஆட வந்தனர் நான்கு மனிதர்கள். அவர்களைக் கரடியும் சிங்கமும் புலியும் சிம்பன்ஸி குரங்கும் பிடித்து வந்தன. அவர்களை ஒரு பெரிய கூண்டில் அடைத்தன. அவர்கள் அனைவரும் சர்க்கஸ் தொழில் நடத்துபவர்கள். இதனைச் சிங்கம் விசாரணை மூலம் தெரிந்து கொண்டது.

"சிங்கராஜா! எங்களை விட்டுவிடுங்கள். இனிமேல் இந்தப் பக்கமே வரமாட்டோம்" என்று மனிதர்கள் அழுதனர். ஆனால் சிங்கராஜா இரங்கவில்லை. 'மனித சர்க்கஸ்' நடைபெற உத்தரவிட்டார். காட்டின் நடுவே இருந்த மொட்டை மைதானத்தில் பெரிய கூடாரம் போடப்பட்டது. அதில் ஒரு மனிதன் சைக்கிள் ஓட்டினான். ஒருவன் வேலைகள் செய்தான். ஒருவன் தலைகீழாக நடந்தான். ஒருவன் சாட்டையால் அடிபட்டு குரங்குலீலைகள் புரிந்தான். ஒருவன் கையில் விலங்குடன் சிறுத்தை போல உறுமினான். மனிதர்கள் சர்க்கஸ் சரியாகப் பண்ணாதபோது அவர்களைக் குதிரையும் சிம்பன்ஸி குரங்கும் ஒரு பெரும் சாட்டையால் அடித்தன. இதைப் பார்த்துச் சிறிய குரங்குக் குட்டிகள் சத்தமிட்டுத் துள்ளிக் குதித்தன. மனிதர்கள் அடிபட்டுத் துடித்தனர். பறவைகள், காட்டு மிருகங்கள்,சின்னச் சின்ன மிருகக்குட்டிகள் எல்லாம் கூட்டம் கூட்டமாக வந்து மனித சர்க்கஸைப் பார்த்து ரசித்தன.

பசுவும் காட்டெருமையும் நாயும் மனிதர்களை விடுதலை செய்ய வேண்டுமென சிங்கத்திடம் வேண்டுதல் செய்தன. சிங்கக்குட்டி ஆதரவு தெரிவித்தது. யானையும் விடவேண்டும் என்று பிளிறியது. இதனால் மனிதர்களை சிங்கம் விடுதலை செய்து நகருக்கு விரட்டியது.

இந்த அனுபவம் அவர்களைச் சிந்திக்கத் தூண்டியது இனிமேல் மிருகங்களைக் கொடுமைப்படுத்தி சர்க்கஸ் தொழில் செய்யக்கூடாதென மனிதர்கள் தீர்மானித்தனர்.





Grebe என்னும் பறவை அதன் சிறகுகளை உண்ணும் பழக்கம் கொண்டது.



Night jar என்ற பறவை பறக்கும்போது எப் போதும் வாயைத் திறந்து வைத் துக் கொண்டேயிருக்கிறது. பூச்சிக ளைப் பிடிக்கவே இவ்வாறு செய்கிறது.



பின்பக்கம் பறக்கும் தன்மையுடைய Humming birds களுக்கு 'பறக்கும் நகைகள்' என்ற பெயரும் உண்டு.



# பறவைகள்

Jackdaw என்ற பறவை தன்னுடைய கூடு கட்ட மின்னும் பொருட்களை மட்டுமேபயன்படுத்துகிறது.

Ostrich பறவைக ளுக்கு பற்கள் கிடை யாது. எனவே அவை உணவை அரைத்து உண்பதற்குக் கற்களை விழுங்குகிறது.



Skylark பறவை காற்றில் ஒரே இடத்தில் நீண்ட நேரம் தங்கும் திறனுடையது.





# இயற்கை அனர்த்த

ஜெகன்

**தேவாலயத்தின் கோபுர உச்சிகள் காற்றில் நெற்கதிர்கள் அசைவது போல ஆடின. தேவாலத்தின் மணிகள் "கணீர் கணீர்" என ஒலித்தன. தூண்கள் வெறிபிடித்தவை போல ஆடின.**

போர்த்துக்கேயரின் ஆட்சி தென் அமெரிக்கா வரை பரவி இருந்த காலம். முதலாம் ஜோர்ச் மன்னன் போத்துக்கல் நாட்டை 1750ஆம் ஆண்டு தொடக்கம் 1777ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தான். அதன் தலைநகரமாக லிஸ்பன் நகரம் விளங்கியது. அழகிய துறைமுக நகரமான அந்நகரத்தில் 1775ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 275,000 மக்கள் வாழ்ந்து வந்தனர்.

கலியன்ஸ் என்றழைக்கப்படும் பாரிய கடற்கலங்கள், போர்த்துக்கல்லின் ஏனைய பகுதிகளிலிருந்து தங்கம், வெள்ளி, பட்டு மற்றும் வாசனைத் திரவியங்களையும் விலை மதிப்பற்ற நானாவிதமான பொருட்களையும் லிஸ்பன் துறைமுகத்திற்கு எடுத்துவரும் அன்றையநாள் இறந்தோரை நினைவுகூரும் "மரித்தோர் தினம்" ஆகும். கிறிஸ்தவர்கள் அதனை இறந்தோரை நினைவுகூரும் ஒரு அமைதியான வழிபாட்டுத் தினமாக அனுஸ்டிப்பார்கள். நகரத்தின் வீதிகள் ஆள் நடமாட்டமின்றி அமைதியாக வெறிச்சோடிக் கிடந்தன. தேவாலயங்களில் மக்கள் வழிபாட்டுக்காகக் கூடியிருந்தனர்.


அரச பரம்பரையினரான ஜோர்ச் மன்னரும் குடும்பத்தினரும் தமது தேவாலயத்தில் தலைதாழ்த்தி வணக்க ஜெபத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆலயத்தின் பீடத்தில் மெழுகுவர்த்திகள் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தன. சாம்பிராணிப் புகையின் வாசனை தேவாலயத்தினுள் நிரம்பி இருந்தது.

அவ்வேளையில் திடீரெனப் பயமுறுத்தும் வகையாகக் "கட கட" வென ஏதோ உருளுவதைப் போன்று ஓசை கேட்டது. இரண்டு நிமிட அமைதியின் பின்னர் மீண்டும் அதிலும் மேலான பேரிரைச்சலுடன் கூடிய சத்தம் எழுந்தது. அது அந்த நகரத்தை அதிர வைத்தது.

அது பூகம்பத்தால் ஏற்பட்ட நடுக்கம் என்பது







லிஸ்பன் நகரை அழித்த பெரிய பூகம்பம்


தடவையாக ஏற்பட்ட நில நடுக்கத்தால் மேகக்கூட்டங்கள் போன்று தூசிகள் காற்றில் வீசப்பட்டு அப்பிரதேசத்தை அழுத்தின. அதனால் மேன்மேலும் கலவரமடைந்த மக்கள் குழப்பத்துக்குள்ளாகினர். அரசகுடும்பத் தேவாலயம் நொருங்கத் தொடங்கியதும் அரசரும் அவரது குடும்பத்தினரும் தேவாலயத்துக்கு வெளியே விரைந்தோடினர். இடிந்து விழும் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்காமல் இருப்பதற்காக மக்கள் கும்பல் கும்பலாகத் துறைமுகத்தை நோக்கி ஓடினர். எனினும் அங்கேயும் பாதுகாப்பில்லை என்பதை அவர்கள் விரைவிலேயே தெரிந்து கொண்டனர்.

துறைமுகத்தை நோக்கி வந்த மக்கள், அங்கே ஆழியின் பேரலைகள் கடல்நீரை அரைமைல் தூரம்வரை பின்னுக்கு இழுத்துச் சென்றிருந்ததைப் பீதியுடன் அவதானித்தனர். மீண்டும் கடல் பூதாகாரமான அலைகளுடன் கரையை நோக்கி வந்து, கரையில் நின்ற கப்பல்களை மோதி அடித்துச் சிதைத்தன. அதனைப் பார்த்த மக்கள் பயத்துடன் நின்றிருக்க, அவர்கள் எல்லோரையும் உயர்ந்து வந்த அலைகள் வாரிச் சுருட்டிக் கொண்டு கடலுக்குள் மீண்டது.

தேவாலயங்களில் எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்திகளுக்கு மேல் உடைந்து வீழ்ந்த கட்டிட மரங்களில் தீ பற்றிக் கொண்டது. அத்தீ நகரமெங்கும் பரவத் தொடங்கியது. லிஸ்பன் நகரமே அழிவுற்றது. அரசர் ஜோர்ச் அவரது குடும்பத்தினர் யாவருமே எதுவித தீங்குமின்றித் தப்பித்துக் கொண்டனர். ஆனால் நகர மக்கள் 60,000 பேர் உயிரிழந்தனர். நகரத்திலிருந்த 20,000 வீடுகளில் 3000 வீடுகள் மாத்திரமே எஞ்சி இருந்தன. அவையும் எரிந்த தீயில் சேதமடைந்திருந்தன.

இப்பூகம்பத்தின் போது துறைமுகத்தைத் தாக்கிய பேரலைகளின் உயரம் 50 அடியாகும். ஸ்கொட்லாந்தில் இருந்து 1000 மைல்களுக்கு அப்பால் உள்ள ஏரிகளின் நீர்மட்டம் உயரும் அளவுக்கு இப்பூமி அதிர்வு மிக மோசமானதாக இருந்தது •

## ங்கள்






தெளிவாகத் தெரிந்தது. தேவாலயத்தின் கோபுர உச்சிகள் காற்றில் நெற்கதிர்கள் அசைவது போல ஆடின. தேவாலத்தின் மணிகள் "கணீர் கணீர்" என ஒலித்தன. தூண்கள் வெறிபிடித்தவை போல ஆடின. கட்டிடங்களில் வெடிப்பேற்பட அவை நொருங்கி வீழ்ந்தன. அவற்றுள் சிக்குண்ட மக்கள் வீழ்ந்து நசுங்கி உடைந்து சிதறும் மண் கல் என் பவற்றால் மூடப்பட்டனர்.

அடுத்து மூன்றாவது


# துணிச்சலான போர் வீரன்

அயல் நாடுகளான இரண்டு கிரேக்க நாடுகளுக்கு இடையே போர் மூண்டது போரில் பங்கு கொள்ள ஒரு நாட்டின் வீரர்கள் இருவர். போர்க்களம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் தமக்குத் தேவையான பணம் பொருள் என்பவற்றையும் தம்முடன் எடுத்துச் சென்றனர். அவ்வாறு அவர்கள் போகும்போது வழியில்




3
உங்களிடம் உள்ள தெல்லாவற்றையும் என்னிடம் கொடுத்து விடுங்கள். இல்லையேல் உங்களைக் கொன்று விடுவேன்.
4
உனக்கேன் நாங்கள் தர வேண்டும். கொள்ளைக்காரனே நாங்கள் உனக்குப் பயப்படபோவதில்லை.
5
இல்லை இல்லை அவசரப்படாதே எங்களிடம் இருப்பவை எல்லாவற்றையும் உனக்குத் தந்து விடுகிறோம்.

கொள்ளைக்காரனைக் கண்டு பயந்த போர்வீரன் தந்திரமாக அங்கிருந்து தப்பிச்சென்றான். தைரியசாலியான போர்வீரன் கொள்ளைக்காரனை எதிர்த்தான்.




கொள்ளைக்காரனும், பலசாலியான போர்வீரனும் சண்டையிட்டனர் இறுதியில் கொள்ளைக்காரன் காயமுற்று இறந்தான்.
8
தொலைந்து போ! நேர்மையும் பலமும் கொண்ட துணிச்சல் மிக்க வீரர்களை எவராலுமேவெல்ல முடியாது.

கொள்ளைக்காரன் இறந்து வீழ்ந்து கிடந்ததைக் கண்ட கோழையான போர்வீரன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தான்.



அமரர்
சு.வி.சுப்பிரமணியம்
நெடுந்தீவு

# பாடசாலை ஏகும் சிறார்களே!

சின்னச் சின்னக் கால்களே!
எங்கு நடந்து போகிறீர்?
பள்ளிக்கூடம் போகவே!
பாங்காய் நடந்து போகிறோம்.

அசைந்து ஆடும் கைகளே!
ஏன் அசைத்துப் போகிறீர்?
கைகள் பலம் கொள்ளவே!
கைகள் அசைத்துப் போகிறோம்.

அங்கும் இங்கும் தலைகளை
ஆட்டிக் கொண்டு போகாதீர்?
ஆபத்துக்கள் வந்திடும்
அவதானமாய் ஏகுவீர்?





## கணித விநோதங்கள்





1 முதல் 9 வரையான இலக்கங்கள் அனைத்தும் பங்கேற்கும் விநோத பெருக்கல்கள் எவையெனத் தெரியுமா?


4 x 1738 = 6952
12 x 483 = 5796
27 x 198 = 5346
39 x 186 = 7254
48 x 159 = 7632
4 x1963= 7852
18 x297 = 5346
28 x 157= 4396
42 x138 =5796


கிடையாகக் கூட்டும்போதும் நிலைக்குத்தாகக் கூட்டும்போதும் மூலைவிட்டத் திசைகளில் கூட்டும் போதும் பெரிய சதுரத்தின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள நான்கு எண்களைக் கூட்டும்போதும் நடுவில் உள்ள சதுரத்தின் நான்கு எண்களைக் கூட்டும் போதும் இடது ஓரமாகவும் வலது ஓரமாகவும் நடுவில் எதிரெதிர் திசைகளில் உள்ள நான்கு எண்களைக் கூட்டும் போதும் கூட்டுத் தொகை 264 ஐப் பெறக் கூடிய மாயச்சதுரத்தினை அறிவீர்களா? இதிலுள்ள இன்னோர் விஷேடம் என்னவெனில் இச்சதுரத்தினை தலைகீழாகப் படித்து மீண்டும் மேலுள்ளவாறு கூட்டும் போதும் விடை 264தான்.


| | | | |
|---|---|---|---|
| 86 | 18 | 69 | 91 |
| 61 | 99 | 88 | 16 |
| 98 | 66 | 11 | 89 |
| 19 | 81 | 96 | 68 |



1



2



3



4



5



6



7



8



9


10


11
pocket
flap



12


13


14


15






## பேப்பர் பலூன்
## ஆக்கங்கள்

# சுகமாய்
# வாழ்ந்திடலாம்



நித்தமும் சுத்தம்
பேணி வந்தால்
சுகமாய் நாங்கள்
வாழ்ந்திடலாம்.


நல்ல நல்ல சிந்தனைகள்
நாளும் நாங்கள் கற்றுவிட்டால்
உள்ளம் புனிதம் ஆகிவிடும்
உயர்வாய் நாங்கள் வாழ்ந்திடலாம்.

சின்னச் சின்ன உடற்பயிற்சி
சிறிது நேரம் செய்து வந்தால்
சிறிய நோயும் பயந்தோடும்
சுகமாய் நாங்கள் வாழ்ந்திடலாம்.

நாளும் நாங்கள் நல்லவற்றை
நன்றே பேணி வளர்த்திட்டால்
இன்றே தொல்லைகள் தொலைந்தோடும்
என்றும் சுகமாய் வாழ்ந்திடலாம்.

◂ நிவேதிதா ▸


# உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள்



நிறம் தீட்டி மகிழுங்கள்

# நேர்மை


மன்னன் வீரேந்திரன் புதிதாக ஒரு திறைசேரி அதிகாரியை நியமித்திருந்தான். ஒரு நாள்
புதிய திரைசேரி அதிகாரி நேர்மையானவர் என்பதை அறிய இன்று மாறுவேடத்தில் அவரைச் சந்திக்க வேண்டும்.
அன்று இரவு திறைசேரி அதிகாரியின் வீட்டை அடைந்தான் அரசன்
ஐயா, இன்னும் அலுவலக வேலை முடியவில்லையா?
சிறிது நேரத்தில் முடிந்து விடும். தாங்கள் சற்று நேரம் காத்திருங்கள்.
!?
வேலை முடிந்ததும் ஒளிர்ந்த விளக்கை அனைத்து விட்டு, மற்றொரு விளக்கை ஏற்றினார் அதிகாரி.
ஐயா, ஏன் எரிந்து கொண்டிருக்கும் விளக்கை அணைத்துவிட்டு வேறொரு விளக்கை ஏற்றுகிறீர்கள்?
இதுவரை அரசாங்க வேலை. எனவே அரசாங்க விளக்கில் வேலை செய்தேன்.
இனி சொந்த வேலை. அதனால் சொந்த விளக்கை ஏற்றினேன்.
உங்கள் நேர்மைக்கு என் பாராட்டுக்கள்.



# ATM CARD

## ஏரீஎம் காட்




அவசர தேவைகளுக்கும் விடுமுறை நாட்களிலும் வங்கிகளில் பணம் பெறும் வசதிக்காக ATM காட் மூலம் பணம் பெறும் இயந்திரம் பார்த்திருப்பீர்கள். Automated Teller Machine என்று அழைக்கப்படும் இந்த இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் லூதர் ஜோர்ஜ் சிம்ஜன் (Luthier Georgc Simjan)அவர் 1959 ஆம் வருடத்துக்கு முன்னரே இந்த இயந்திரத்தை வடிவமைத்திருந்தார். பரீட்சார்த்தமாக ஆறுமாத காலம் வரை நியூயோர்க் நகர வங்கி (City Bank ot Newtork) யில் அது பயன்படுத்தப்பட்டது. அது பெருமளவில் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை.





இன்று நாம் பயன்படுத்தும் புதிய இயந்திரத்தை ஆக்கியளித்தவர் ஜோன் செப்பேட் பரன் (John Shepherd Barron)ஆவார். அவரால் ஆக்கப்பட்ட இயந்திரம் ஐக்கிய இராச்சியத்தில் நிறுவப்பட்டது. அதிலிருந்து முதன் முதலாகப் பணத்தைப் பெற்றவர் அந்நாட்களில் புகழ் பெற்றிருந்த நடிகரான றெக்வமி (Reg Vamey) என்பவராவார். மக்களிடையே அந்நாளில் இதனைப் பிரசித்தப்படுத்த நடிகரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ATM இயந்திரத்தின் பயன்பாடு இன்று உலகம் முழுவதும் இலங்கையிலும் பிரபல்யம் பெற்று விளங்குகிறது.

---

"எங்க சொல்லு ஒன்பதை அஞ்சால பெருக்கினால் விடை என்ன?"

"நாற்பது."


"கெட்டிக்காரன் நல்ல முன்னேற்றம்"

"என்ன சேர் இவன் தப்பா சொல்லுறான். பாராட்டுறீங்க"

"இதுக்கு முந்தி முப்பத்தி ஏழு எண்டெல்லெ சொன்னான். அப்ப இது நல்ல முன்னேற்றம் தானே.."



# யாழ்ப்பாணம்




| | |
|---|---|
| மொத்தப்பரப்பளவு : | 1025சதுரகிலோ மீற்றர் |
| நிலப்பரப்பு: | 929சதுர கிலோமீற்றர் |
| நீர்நிலைகள்: | 96 சதுரகிலோ மீற்றர் |

பிரதேச செயலாளர் பிரிவுகள்: 12

1. யாழ்ப்பாணம்
2. சாவகச்சேரி
3. ஊர்காவற்துறை
4. நெடுந்தீவு
5. நல்லூர்
6. பருத்தித்துறை
7. வடமராட்சி தென்மேற்கு
8. வடமராட்சி கிழக்கு
9. வடமராட்சி வடக்கு
10. வலிகாமம் வடக்கு
11. வலிகாமம் மேற்கு
12. வேலணை

| | |
|---|---|
| மக்கள் தொகை : | 603000 |
| ஆண்கள் : | 286000 |
| பெண்கள் : | 317000 (2004இல் உள்ளபடி) |
| தொழிலாளர் அணி: | 183151 (36.2%) |

**தொழிலாளர் அணியின் பங்கீடு**

| | |
|---|---|
| விவசாயம் | 38.4% |
| கைத்தொழில் | 19.8% |
| சேவைகள் | 41.7% |



## வளங்களும் வாய்ப்புக்களும்

போர்ச்சூழல் ஏற்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல தொழிற் சாலைகள் இருந்தன. சமாதானம் ஏற்பட்ட பின்னர் கைத்தொழில் மீண்டும் அபிவிருத்தி யாவதற்கு வாய்ப்புகள் உள்ளன. சின்ன வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, புகையிலை, வாழை, திராட்சை, காய்கறிகள் என்பனவே மாவட்டத்தின் பிரதான பயிர்க ளாகும். பயறுவகைகள், பனை என்பவற்றின் மூலமும் மக்கள் வருமானம் பெறுகின்றனர். மீன்பிடி பிரதான வருமான வழியாகும். தற் சமயம் சில சிறுகைத்தொழில் முயற்சிகள் இடம்பெறுகின்றன. கோழி வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்புகள் சிறிய அளவில் இடம் பெறுகின்றன. யாழ்ப்பாணமே வடக்கில் மக் கள் தொகை அடர்த்தியாக உள்ள மாவட் டமாகும். ஆள் வருமானமும் கூடுதலாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் 22 வர்த்தக சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

## நாக்கே.. நாக்கே...



நமது நாக்கில் நான்கு வகையான சுவை மொட்டுகள் உள்ளன.

நாக்கின் நடுப்பகுதியில் சுவை அரும்புகள் காணப்படுவதில்லை.

நாக்கின் முன் நுனிப்பகுதி உப்பு மற்றும் இனிப்புச் சுவைகளை அறிய உதவுகிறது.

நமது நாக்கில் சுமார் 3 ஆயிரம் சுவை அரும்புகள் உள்ளன.

நம் உடல் நாக்கின் சுவை உணர்வு மூலமாக ஒரு சதவீத உணர்ச்சியைப் பதிவு செய்து கொள்கிறது.

**பேய்களுக்கு அஞ்சாமலிருக்க...**

# புதுப் பேய்

■ செ. செல்வதாசன்



**ஒரு** நாள் இரவு சங்ரிங்போ எனும் சீன இளைஞன் நடந்து சென்று கொண்டிருக்கும்போது வழியில் ஒரு பேயைச் சந்தித்தான்.

அதனைப் பார்த்து சங்ரிங்போ "நீ யார்?" என்று கேட்டான்.

'நான் ஒரு பேய்" எனப் பேய் பதில் கூறியது.

"அது சரி நீ யார்" எனப்பேய் கேட்டது.

"நானும் பேய்தான்" என சங்ரிங்போ பொய் கூறினான்.

"எங்கே போகிறாய்?"

"உவான் பட்டினத்திற்குச் செல்லுகிறேன்".

"நானும் அங்குதான் போகிறேன்". இவ்வாறு கதைத்தவாறு நீண்டதூரம் சென்றனர்.

'இப்படியே போவது மிகவும் மெதுவாக உள்ளது ஏன் முறைமாற்றி ஒருவரை ஒருவர் சுமந்து செல்லக்கூடாது?" என்று பேய் ஆலோசனை கூறியது.

"நல்ல யோசனை தான்" சங்ரிங்போவும் அதற்குச் சம்மதித்தான்.

முதலில் பேய் அவனைப் பல காத தூரம் சுமந்து சென்றது.

"நீ சரியான பாரமாய் இருக்கிறாய் நீ என்ன பூதமா?" என்று பேய் அவனைச் சுமந்து நடந்தவாறு கேட்டது.

"நான் ஒரு புதிய பேய் அதுதான் இவ்வளவு பாரம்..." என்றான் சங்ரிங்போ

பின்னர் அவன் பேயைச் சுமந்தான் பேய் எள்ளளவும் பாரமில்லாமல் இருந்தது இவ்வாறே மாறி மாறிச் சுமந்தவாறு சென்று கொண்டிருந்தனர். "நான் ஒரு புதுப்பேய் எதற்காக நாம் மிகவும் அதிகமாகப் பயப்பட வேண்டும் என்று கூடத் தெரியவில்லை" என்றான் சங்ரிங்போ. "மனிதரின் எச்சில் தான் நமக்குப் பகை" என்று பேய் கூறியது.

இவ்வாறு உரையாடியவாறு நடந்து அவர்கள் ஒரு நீரோடையை அடைந்தனர். சங்ரிங்போ முதலில் நதியைக் கடக்குமாறு பேயைக் கேட்டுக்கொண்டான். ஒரு சப்தமும் இல்லாமல் பேய் ஆற்றைக் கடந்தது.

சங்ரிங்போ "சளாரெனப்" பெரிய

# சீனப் பேய்க்கதை 02

சத்தத்துடன் ஓடையைக் கடந்தான்.

"நீ எப்படி இவ்வாறு சத்தம் எழுப்புகிறாய்" எனப்பேய் சங்ரிங்போவிடம் வினாவியது.

"நான் ஒரு புதுப்பேய் தானே அதுதான் இன்னும் தண்ணீரூடாகக் கரைந்து வெளியேறப் பழகவில்லை அதற்காக நீ என்னைக் குற்றம் சாட்டக்கூடாது" என்றான்.

பட்டினத்தை நெருங்கியதும் சங்ரிங்போ பேயைத் தூக்கித்தனது தோளில் போட்டுக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

கீச்சுக்குரலில் தன்னை இறக்கி விடுமாறு பேய் கெஞ்சியது. அவன் அதனைக் காதில்



போட்டுக் கொள்ளாமல் நடந்து பட்டினத்தை அடைந்தான்.

அவன் பேயைக் கீழே போட்டபோது அது தனது உருவை மறைத்துக் கொண்டு ஓர் ஆடு போலத் தனது உருவை மாற்றிக் கொண்டது.

அப்பொழுது அவனுக்கு பேய் முன்னர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. அதன் மீது உடனடியாகவே எச்சிலை உமிழ்ந்தான். இதனால் ஆடு ஆக மாறிய பேயினால் தனது சுய உருவை அடைய முடியவில்லை.

இதுதான் தருணம் என எண்ணிய சங்ரிங்போ அந்த ஆட்டினைச் சந்தையில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க் காசுக்கு விற்றுவிட்டுத் திரும்பினான்.



# நிலவும் இரவும்

வானில் நிலவும் எறிக்குது
வாகாய்க் கண்ணைப் பறிக்குது
வாடைக் காற்று வீசுது
வாசங் கொண்டு வீசுது

தென்னை மரமும் ஆடுது
சேர்ந்து ஓலை ஆடுது
வண்ண மரக் கிளைகளும்
நிலவில் ஒளிர்ந்து ஆடுது

தவளை தத்தி நடக்குது
தாவி வெளவால் பறக்குது
அலறி ஆந்தை முறுக்குது
அரவம் கூடக் கொறிக்குது.

வீட்டு முன்றில் நின்றுமே
விரும்பி இதனைப் பார்ப்போம்
ஏட்டில் சொல்லிடா அழகது!
இன்பம் நிறைந்த பொழுதது!

■ இயல்வாணன்

# குருதட்சிணை



மன்னன் மானவர்மன் அவைக்கு சட்டத்தைப் போதிக்கும் ஓர் ஆசிரியர் வந்தார். அவருடன் ஓர் இளைஞரும் வந்திருந்தார். மன்னரிடம் மதிவாணன் என்ற மதியூக மந்திரி இருந்தார்.
வணக்கம் மன்னா! இவன் என் மாணவன்.




அரசே இவர் என்னிடம் பயிற்சிபெற்றபோது ஏழை மாணவனாக இருந்தார். அதனால் இரக்கப்பட்டு பயிற்சி கொடுத்தேன். ஆனால் இப்போது பெரிய பணக்காரராகி விட்டார். அதனால்தான் பணம் கேட்கிறேன்.
ஆமாம் அரசே! எனது முதல் வழக்கு வெற்றி பெற்றபின் ஆசிரியருக்கு பணம் தருவதாகச் சொல்லி இவரிடம் சட்டம் பயின்றேன். என் முதல் வழக்கு வெற்றி பெறாத நிலையில் நான் எப்படி இவருக்கு பணம் தர முடியும். முதல் வழக்கு வரட்டும். அப்போது கண்டிப்பாகப் பணம் தருகிறேன்.
மன்னன் தீர்ப்புக் கூறினான்.
ஒப்பந்தப்படி மாணவர் முதல் வழக்கை நடத்தவுமில்லை. வெற்றி பெறவுமில்லை. அதனால் இவ் வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்.
அந்த இளைஞன் ஆசிரியரைக் கேலியாகப் பார்த்தான். அப்போது மந்திரி மதிவாணன் குறுக்கிட்டார்.
மன்னா சற்றுப் பொறுங்கள். இம் மாணவர் ஆசிரியருக்கு பணம் கொடுத்துவிட்டுச் செல்லுவதுதான் முறை.


மந்திரியாரே அது எப்படிச் சரியாகும்.
இந்த இளைஞர் தனது முதல் வழக்கு வெற்றி பெற்றால் உடனடியாகப் பணம் தருவதாகக் கூறினார் அல்லவா?
ஆமாம் எல் ா வழக்கு வெற்றி பெற்றதும் உடனே ஆசிரியருக்கு பணம் தந்து விடுகிறேன். அதில் மாற்றமில்லை.
இங்கே உங்களுக்கும் சட்ட ஆசிரியருக்கும் நடந்த வழக்கில் வெற்றி பெற்றது நீங்கள்தானே.
ஆ...ஆ மாம்... வந் து...
அதனால் ஆசிரியருக்கு கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து விடுங்கள்.
இளைஞரின் முகம் வெளிறிப் போனது. தனது தவறை உணர்ந்து வருந்தினார்.
எல்லோரும் என்னை மன்னியுங்கள். ஆசிரியரே என் தவறை உணர்ந்து கொண்டேன். இப்போதே பணம் தருகிறேன்.
மாணவனே உன்னிடம் பணம் பெறுவது என் நோக்கமல்ல. நீ ஒழுக்கம் உள்ளவனாக வரவேண்டும். அதுவே என் விருப்பம். எனக்குப் பணம் வேண்டாம். நான் வருகிறேன்.
ஆசிரியரை அனைவரும் வியந்து பார்த்தனர்.

# ஒரு சொல் இருபொருள்



மாதுளை என்றால் ஒருவகை கனி
மா துளை என்றால் பெரியதுளை

நாவாய் என்றால் மரக்கலமாம்
நா. வாய் என்றால் இரு உறுப்பு

பாவாடை என்றால் பெண்கள் உடை
பா வாடை என்றால் பாட்டு மணம்

மாதிரி என்றால் உதாரணம்
மா திரி என்றால் மாவு திரித்தல்

கவிகை என்றால் வளைவு, குடை
கவி கை என்றால் கவிஞர்கரம்

அதிகாரம் என்றால் ஆட்சி, உரிமை
அதி காரம் என்றால் அதிக உறைப்பு

செவ்வாய் என்றால் ஒரு கிரகம்
செவ் வாய் என்றால் சிவந்த இதழ்

பார்த்திட ஒரு சொல் தான் இருக்கும் -பதம்
பிரித்திட மறுபொருள் உருவெடுக்கும்

வார்த்தைகள் இப்படிச் சுகம் கொடுக்கும் -சொல்ல
வாயொடு மனத்திலும் மகிழ்விருக்கும்




## விடுகதைகள்

1. புகை
2. மல்லிகைப்பூ
3. சேவல்
4. பூசனிக்காய் கொடி
5. வெளவால்
6. கறையான் புற்று
7. தேங்காய்
8. நீர்க்குமிழி
9. நெருப்புப் பெட்டி



அன்பான பிள்ளைகளே

உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை அனைத்தையும் அர்ச்சுனா தனது பக்கங்களில் சேர்த்து கொள்ளுவான்.

அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். புதிய படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் அழகிய நிழற்படத்துடன் எமக்கு அனுப்பி வையுங்கள்

**தொடர்புகளுக்கு :**

**ஆசிரியர்**
**அர்ச்சுனா, சிறுவர் வட்டம்**
**361 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



# அர்ச்சுனா

ARCHUNA

## சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : ..............................................................

..............................................................

வகுப்பு : ..............................................................

பிறந்த திகதி : ..............................................................

பாடசாலையின் பெயர் : ..............................................................

..............................................................

வீட்டு முகவரி : ..............................................................

..............................................................

..................................... மாணவர் கையொப்பம்

..................................... அதிபர் கையொப்பம்



## சிறுவர் வட்டம்



15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் அர்ச்சுனாவில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை கவிதை கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனாவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானாகவே எழுதினார் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.


அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.



# இரவில் மரங்களின் கீழே தூங்காதீர்கள்

இரவு நேரங்களில் மரங்களுக்குக் கீழே நித்திரை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஆனால் பகல் நேரங்களில் மரங்களுக்குக் கீழே நன்றாக நித்திரை செய்யலாம். தாவரங்கள் பகல் வேளைகளில் கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளிவிடுகின்றன. இரவு நேரங்களில் அவை பிராண வாயுவை உட்கொண்டு கரியமில வாயுவை வெளிவிடுகின்றன.ஆகையால் இரவு நேரங்களில் மரங்களின் கீழே நித்திரை செய்தால் அவை வெளிவிடும் கரியமில வாயுவை நாம் சுவாசிக்க நேரிடும். அதனால் எமது உடல் நலம் பாதிக்கப்படும். எனவே இரவு நேரங்களில் மரங்களின் கீழே நித்திரை செய்வதைத் தவிர்ப்போம்.





சிலந்தியின் வாயிலிருந்து வெளிவரும் " சிப்பனர் ரெட் " என்ற திரவமே காற்று பட்டவுடன் சிலந்திவலையாக உருவாகிறது

பறக்கத் தெரியாத பறவை: பென்குயின்

நீந்தத் தெரியாத விலங்கு: ஒட்டகம்



# நிம்மதியைத் தேடி

எஸ். மிலானி




மகத நாட்டில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கோ கவலையும் துன்பமும் நிறைந்திருந்தது. அவற்றைப் போக்க வழியறியாது ஏங்கினான். இறுதியாக ஒரு ஞானியைச் சந்தித்தான். அவரிடம் தனது துயரங்களை நீக்கும் வகை காண ஆலோசனை கூறும் படி கேட்டான். அவரோ "உன்னுடைய நாட்டில் போதும் என்ற மனத்துடன் வாழும் ஒருவனைக் கண்டுபிடித்து அவனிடம் அவன் அணிந்திருக்கும் சட்டையை வாங்கிப் போட்டுக்கொள் அப்போதுதான் உனது துன்பதுயரங்கள் நீங்கும்" என்றார். அரசன் அன்றிலிருந்து தனது நாட்டில் மனநிம்மதியோடு வாழும் மனிதனைத் தேடி அலைந்தான்.

ஆனால் இறுதியில் அந்த ஞானி கூறியதைப்போல் ஒரு மனிதனைச் சந்தித்தான் எனினும் அந்த மனிதனின் சட்டையை அணிந்து கொள்ள அரசனால் இயலாமற் போறிற்று. ஏனெனில் அந்த மனிதன் சட்டையே அணிவதில்லை. அரசன் நிம்மதி காண வழி என்ன? என்று அறிய மீண்டும் யோசித்தான். நிம்மதியைக் காணச் சட்டையும் தேவையில்லை என்ற உண்மையே அவனுக்குப் புலப்பட்டது.

# மெல்லச் சிரியுங்க..





# படம் பார்த்து நிறம் தீட்டுங்கள்





1ஆவது படத்திலிருந்து 2ஆவது படம் ஆறு விடயத்தில் வித்தியாசமாக உள்ளது. அவற்றினை கண்டுபிடியுங்கள்





# உங்கள் கைவண்ணங்கள்

## யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள்





ஸ்ரீ. ஆதித்தன்
தரம்-01



கோ.லெஜிந்தன்
தரம்-01


பாதணி உலகில் பதிந்துவிட்ட பெயர்
Bata
உறுதி • நவீன வடிவங்கள் • அழகிய நிறங்கள்
லக்சுமி ஓகனைஷேசன்
Lukshmee Organization
(வட மாகாண ஏக விநியோகஸ்தர்)
இல. 25, 4ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 021 222 7167




'அர்ச்சுனா' இதழ் உதயன் வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுகிறது. இல. 361 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.